தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான உதவி சுற்றுலா அலுவலர் (நிலை - II) பதவியின் 42 காலிப்பணியிடங்களுக்கான அறிவிக்கை 22.07.2019 அன்று வெளியிடப்பட்டு 29.09.2019 அன்று 620 விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. இதுவே, இப்பதவிக்காக, தேர்வாணையத்தால் அறிவிக்கை வெளியிடப்பட்டு நடத்தப்படும் முதல் தேர்வாகும்.

இதற்கான தேர்வு முடிவுகளை தேர்வாணையம் இன்று (18.12.2019) வெளியிட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தங்களது தர வரிசையினையும் அவர்கள் பெற்ற மதிப்பெண்களையும் தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in ல் அவர்களது பதிவெண்ணை உள்ளீடு செய்து தெரிந்துகொள்ளலாம். இப்பதவிக்கான தேர்வு முடிவுகள் தேர்வாணையத்தின் தேர்வுமுடிவுகளுக்கான கால அட்டவணையில் அறிவிக்கப்பட்டபடி டிசம்பர் மாதத்திலேயே வெளியிட்டுள்ளது.

தேர்வாணையத்தின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு தேர்வர்கள் இத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், அவர்களின் பொதுவான தரவரிசை, அவர்களின் இன சுழற்சிக்கான தரவரிசை மற்றும் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான தரவரிசை ஆகியன வெளியிடப்பட்டுள்ளன. மேலும் யார் வேண்டுமானாலும் எந்த ஒரு விண்ணப்பதாரரின் மதிப்பெண்ணையும் அவர்களின் பதிவெண்ணை உள்ளீடு செய்து தெரிந்து கொள்ளலாம்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள தரவரிசை மற்றும் இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்க்கும் நிலைக்கு தெரிவு செய்யப்படுவர்.

...2

சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தெரிவு செய்யப்படுபவர்களின் பட்டியல் விரைவில் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் வழியாக மட்டுமே விவரங்கள் தெரிவிக்கப்படும். அஞ்சல் / கடிதம் வழியாக தகவல்கள் ஏதும் அனுப்பப்பட மாட்டாது.

குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் பெறப்படாவிட்டால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பல்ல. எனவே விண்ணப்பதாரர்கள் தேர்வாணைய இணையதளத்தினை (www.tnpsc.gov.in) தொடர்ந்து கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இரா. சுதன், இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

தேதி: 18.12.2019